1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

வரையறுத்த ஸ்ரீ லங்கன் கற்றறிங் (கம்பனி) கம்பனியின் 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பட்டயக்கணக்காய்வாளர் நிறுவனத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டேன்.

கம்பனி 2025 மார்ச் 31 உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

அவ் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நியமங்களின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது குழுவினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனிகுழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான

வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
LKAS 01- நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தலின் 99 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனம் வகைப்படுத்தலை அடிப்படையை பயன்படுத்தி அல்லது அவற்றினுடைய செயற்பாடுகளின் தன்மை அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் செலவினங்களின் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவை உண்மையான அதிக சம்பந்தமாக தகவல்களை வழங்குகின்றன. சர்வதேச விமானங்களிற்கு இடையில் உணவு வழங்குதல் செலவின வகைப்படுத்தல்	SLC ஆனது 2026 மார்ச் 31 அளவில் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையை பின்பற்றும் மற்றுமு் அடுத்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும்.	நாங்கள் கம்பனியானது சகல செலவினங்களையும் தெரிவு செய்து சமர்ப்பிக்கப்படுகின்ற முறையின் அடிப்படையல் சரியாக ஒதுக்கப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு செலவின வகைப்படுத்தல் நடைமுறை மீளாய்வு செய்து வலுப்படுத்தப்பட வேண்டுமென பரிந்துரைக்கின்றோம். உரிய செலவின ஒதுக்கீடு

நடைமுறையின் பின்னணியை மீளாய்வு செய்யும் போது ‘‘தன்மை’’ முறையை பயன்படுத்தி சமர்ப்பிக்கப்பட்ட செலவினங்களை பொதுவாக சமர்ப்பிக்கப் பட்டிருந்ததென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சில செலவினங்கள் LKAS 1 இடன் முழுமையாக இணங்கி செய்யப்படுவதிலிருந்து அவற்றின் உரிய செயற்பாடுகளின் வழியில் முறையாக வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவற்றின் ‘‘செயற்பாடுகள்’’ அடிப்படையில் செலவினத்தின் அதிகளவன உண்மைத் தன்மையான வகைப்படுத்தலை கொண்டிருக்கவில்லை.		நியாயமான மற்றும் தொடர்ந்து பயன்படுத்தப்படும் அடிப்படையயை பயன்படுத்தி நிர்ணயிக்கப்பட வேண்டும். இது நியமத்திற்கு முரணானதால் கம்பனியானது கலவை செலவின வகைப்படுத்தலை பயன்படுத்துவதை தவிர்க்கப்பட வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டியவை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
2025 மார்ச் 31 இல் உள்ளவாறு சிறீலங்கன் எயாலைன்ஸ்சிடமிருந்து பெறவேண்டிய மீதி ரூபா 20.06 பில்லியனாகும். 361 நாட்களிற்கு மேல் நிலுவையாக இருக்கின்ற அண்ணளவாக 77 சதவீதம் (இ.ரூபா 15.36 பில்லியன்) குறிப்பிடத்தக்க காலம் மற்றும் அறவீட்டு அபத்தினை சுட்டிக்காட்டுகின்றது. நிலுவையாக இருக்கின்ற மீதி ஐ.அ.டொலர் 67.7 மில்லியனிற்கு சமமான (ரூபா 296.25 மில்லியன்) கருத்திற்கொள்ளக் கூடிய நாணய ஆபத்திற்கு கம்கனியை உள்ளாக்கும். கம்பனியினுடைய திரவத்தன்மை மற்றும் செயற்பாடட ஸ்திரத்தன்மைக்கு ஒரு வாடிக்கையாளர் பொருமளவு அச்சுறுத்தல பெற வேண்டியவையின் அளவு தொடர்ந்திருந்தது. மேலும், போதுமான ஒதுக்கீடு இன்மை அல்லது பதிவழிப்பு திட்டமின்மை என்பவற்றால் நிதி விளைவுகளை தவறாக ஆபத்தை அதிகரிக்கின்றது மற்றும் செயற்பாடு நிறுவனத்தின் தொடர்ந்து செல்லும் தன்மையை குறிப்பிடுகின்றது	2025 யூன் 23 இல் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 25/1076/804/121 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் விரிவாக உள்ளது. இலங்கை அரசாங்கம் இதுவரை தொடர்ந்திருத்தல் மீள்கட்டமைப்பில் உள்ளமையால் நிறுவனம் (SLA) தொடந்து இயங்குவதை உறுதிப் படுத்துவதற்கு ‘‘ஆறுதல் கடிதம்’’ உடாக சிறீ லங்கன் எயாலைன்சிற்கு நிதி உதவி வழங்கியது. SLA ஆனது அவர்களுடைய காசுப்பாய்ச்சலை அதிகரிப்தற்கும் அமைச்சரவைக்கு நிதிகளை அதிகரிப்பதற்கும் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அமுததிக்கு காத்திருக்கின்றனர். எதிர்காலத்தில் SLC இற்கு நிலுவையாக இருக்கின்ற தொகையை தீர்ப்பதற்கு SLA அனுமதிக்கும்	கம்பனியானது நிலுவையாக இருக்கின் SLA மீதிகள் அறவிடுவிட உடனடியாக தொடங்கப்பட வேண்டும். வேணடப்பட்டால் சட்ட அல்லது ஒப்பந்த தீர்வுகளை ஆராய வேண்டும்..

1.6.2 செலுத்த வேண்டியவை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
கணக்காய்வின் போது நிறைவேற்று சம்பள கட்டுப்பாட்டு கணக்கு (பேரேடு குறியீடு 444003) இ.ரூபா 1,451,873 எதிரமறையாக செலுத்த வேண்டிய மீதிகளை வெளிப்படுத்தயது. விசாரணையில் நிறைவேற்று மட்ட உத்தியோகத்தர்களிற்கான சம்பளங்கள் உள்ளபடியான சம்பள கொடுப்பனவு திகதிக்கு முன்னர் MSL கம்பனிக்கு முகாமைத்துவம் தெளிவுடுத்தியது. சம்பள கட்டப்பாட்டு கணக்கில் அதே மாதத்தில் சம்பந்தப்பட்ட சீராக்கல் செய்திருந்தது. எவ்வாறாயினும் கணக்கீட்டு பதிவுகளில் எதிர்மறை மீதி விதந்துரைத்த சாத்தியமான கால சிக்கலை ஏற்படுத்துகிறது அல்லது சமர்ப்பித்தல் அல்லது சம்பள வழங்கலிற்கும் கணக்கீட்டு பதிவேடுகளிற்கும் இடையில் முறையான இணக்கமின்மை உள்ளது.	ஒவ்வொரு மாத இறுதியிலும் அண்ணளவாக கால வித்தியாசம் மாத்திரம் உள்ளதுடன் கணக்ககள் ஒழுங்காக இணக்கம் செய்கின்றன.	கம்பனியானது வெளித்தரப்பினருக்கு செய்யப்பட்ட சம்பள கொடுக்கல் வாங்கல்களின் பதிவுகளை முறையான ஆதாரமான ஆவணங்களுடன் உறுதி செய்வதற்கு நிறைவேற்று சம்பள கட்டுப்பாட்டு கணக்கை தொடர்ந்து சரிபார்க்கப்பட வேண்டும் மற்றும் எதிர்மறை செலுத்த வேண்டியவற்றிற்கு பதிலாக முற்கொடுப்பனவுகள் அல்லது முற்பணங்கள் என தெளிவாக வகைப்படுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

1.6.3 முற்பணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	நிதிக் கொள்கை மற்றும் செயற்பாட்டு கைநூலின் 3.2 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 75,000 ஐ விஞ்சிய காசு மற்பணங்கள் பொறுப்புடைய உத்தியோகத்தர்களிற்கு காசோலை மூலம் வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் இந்த கொள்கை பல சந்தர்ப்பங்களில் பின்பற்றப் பட்டிருக்காததுடன் ரூபா 100,000 ஆன முற்பணங்கள் காசாக வழங்கப்பட்டிருந்தது.	2025 சனவரியிலிருந்து புதிய காசு பாய்ச்சல் வார இறுதியின் பொது அவசர கொள்வனவு தேவைகளை செய்வதற்கு கொள்வனவுப் பிரிவால் வழங்கப்பட்டிருந்தது. CEO/MF அனுமதியுடன் கொள்வனவு பிரிவால் அவசர காசுக் கொள்வனவை செய்வதற்கு ரூபா 300,000 புறம்பாக இருந்தது. நிதிக் கொள்கை மற்றும் செயறபாட்டு கைநூலில் குறிப்பிடப்பட்ட தொகை தற்போதைய வேண்டுகையை செய்வதற்கு பேரியதாக இருக்கவில்லை.	கம்பனியானது நிதிக் கொள்கையின் 3.2 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 75,000 இற்கு மேலான காசு முற்பணங்கள் முறைகேடான பயன்படுத்தல் ஆபத்தை குறைப்பதற்கு காசோலை மூலம் வழங்கப்பட்டது. இது காணக்காய்வு வழிகளை அதிகரித்தல் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்தல் வேண்டும்.
(ஆ)	அனுமதிக்கப்பட்ட சிறு கட்டுநிதி காசு பாய்ச்சல் (3.8 ஆம் பிரிவின்படி) ரூபா 400,000 ஆக உள்ளது. ஆனால், கணக்காய்வு கண்டுபிடிப்பு ரூபா 1,100,000 மொத்தத்தில் ரூபா 1,000,000 காசாளரிடமும் ரூபா 100,000 பாதுகாப்பு பிரிவிலும் - எல்லையை விஞ்சி ரூபா 700,000 உம் உள்ளது.	தற்போதைய நிதி கொள்கை மற்றும் செயற்பாட்டு கைநூல் 2018 பெப்ரவரியில் நாளது வரையாக்கப்பட்டிருந்தது. பின்னர் இது செயற்பாட்டு தேவைகள் காரணமாக CEO/MF இன் அனுமதியுடன் தற்போது வரையான செயற்பாட்டு	முகாமைத்துவம் ரூபா 400,000 சிறு காசு கட்டுநிதி எல்லையை அனுமதிப்பதற்கு பின்பற்றுதலை உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேலதிக காசு வைத்திருத்தலிற்கான

		தேவைகளின் அடிப்படையில் விதந்துரைக்கப்பட்டவாறு ரூபா 1.2 மில்லியனிற்கு அதிகரிக்க திருத்தப்பட்டதுடன் 2018 மார்ச் 29 ஆந் திகதிய பணிப்பாளர் சபையால் அனுமதிக்கப்பட்டது. நிதிக் கைநூல் நாளதுவரை யாக்கப்பட்டிருந்ததுடன் 2025 நவம்பர் 30 அளவில் அனுமதிக்காக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.	ஏதாவது வேண்டுகை முறையான அதிகாரம் மற்றும் ஆவணங்காளால் முறையாக அனுமதிக்கப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

<table>
<tr><th>சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு</th><th>இணங்காமை</th><th>முகாமைத்துவத்தின் கருத்துரை</th><th>பரிந்துரைகள்</th></tr>
<tr><td>(அ) கட்டுப்பாட்டாளர் நாயத்தால் வழங்கப்பட்ட 2022 செப்தெம்பர் 16 ஆந் திகதிய 11/2022 ஆம் இலக்க சொத்த முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு</td><td>இருப்பத் துண்டுகள் கைதவிர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட வானங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் வழங்கப்பட்ட பதிவு நீக்கியவற்றின் பிரதி கைதவிர்ப்பு நடைமுறை பூர்த்தியான பின்னர் உடனடியாக கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எவ்வாறாயினும் கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட வாகனப் பட்டியலில் 02 வாகனங்கள் உள்ளடக் கப்பட்டிருக்கவில்லை, இதன்படி கையாளப் பட்டிருக்கவில்ல.</td><td>ஆறு வானங்கள் மீதான கருத்துரைகள் கீழே தரப்பட்டுள்ளன.
<table>
<tr><th>வாகன இல</th><th>வாகன வகை</th><th>தற்போதைய நிலை</th></tr>
<tr><td>GI 2059</td><td>மாருதி வான்</td><td>2017 கைதவிர்க் கப்பட்டது.</td></tr>
<tr><td>GL 1836</td><td>நீர் பவுசர்</td><td>2021 கைதவிர்க் கப்பட்டது.</td></tr>
</table>
இது மோட்டார் வாகன பெர்குவரத்து திணைக்களத்தடன் சேர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 2025 ஒக்தோபர் 31 இல் மூடப்படும்.</td><td>கம்பனியனது மோட்டார் வாகன போக்குரத்து திணைக்களத்தில் இரண்டு வாகனங்கள் முறையாக அகற்றுவதன் மூலம் 11/022 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவிற்கமைய இணங்கியொழுக வேண்டியதுடன் உடனடியாக கட்டுப்பாட்டாளர் அலுவலகத்திற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.</td></tr>
<tr><td>(ஆ) 2023 செப்தெம்பர் 27 ஆந் திகதிய PED 01/2021 (iii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை- குறைநிரப்பு III- அரசுடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான</td><td>சகல அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளும் (SOEs) பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் அவற்றிற்கு சொந்தமான நிர்வாக</td><td>நிதி கொள்கை மற்றும் செயற்பாட்டு கைநூல் 2013 பெப்ரவரி 26 இல் பணிப்பாளர் சபையால் முதலில் அனுமதிக்கப்பட்டிருந்தது. இது பின்னர் திருத்தப்பட்டதுடன் 2018 மார்ச் 29 ஆந் திகதிய பணிப்பாளர் சபையால்</td><td>கம்பனியானது மீளாய்வை இறுதி யாக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்யதுடன் அனுமதிக்கான பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு</td></tr>
</table>

செயற்பாட்டு கைநூல்	மற்றும் நிதிக் கைநூல் பின்பற்றுவதற்கும் கால ரீதியாக நாளது வரையாக்குவதற்கும் வேண்டப்பட்டது. எவ்வாறாயினும் கணக்காய்வின் போது அதிகாரசபையின் நிர்வாக மற்றும் நிதிக் கைநூல் சுற்றறிக்கையின் வெண்டுகைக்கு முரணாக திணைக்களத்தால் அனுமதிக்கப் பட்டிருக்கவில்லை,	அனுமதிக்கப்பட்டது. 2018 மார்ச் மாதத்தில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் கணக்காய்வு அத்தியட்சகரால் வேண்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட கைநூலின் பிரதிகள் 2018 ஏப்ரல் மாதத்தில் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அமைச்சின் ஊடாக திறைசேரியின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டன. அதன் பின்னர் இது கைநூல் மூலப் பிரதி சமர்ப்பிப்பதற்காக MPED ஐ பின்பற்றியிருந்தது. இருந்த போதிலும் நாங்கள் MPED இடமிருந்து எந்தவொரு பின்னூட்டலையும் இன்னமும் பெறப்பட்டிருக்கவில்லை.	நிர்வாக மற்றும் நிதிக் கைநூல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.8 பொதுவான IT கட்டுப்பாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	உற்பத்திக்காக எடுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் சமையல் அறை பதிவேடுகள் விமான பறத்தல் முறைமை / ஒராக்கிள் முறைமை ஊடாக உருவாக்கப்பட்ட வருமான கட்டிலிற்கு எதிராக நேரடியாக ஆரயப்பட்ட / இணக்கம் செய்ய முடியாதிருந்தது. இந்த கண்டறியும் தன்மையிலுள்ள இடைவெளி வருமான அனுமதி மற்றும் இருப்பு பயன்பாட்டு முழுமை மற்றும் வெளிப்படையான சரிபார்த்தலில் சிரமங்களை உருவாக்குகின்றது.	SLC ஆனது வித்தியாசமான விமாங்களிற்கு சொந்தமான தனிப்பட்ட விமானங்களின் அடிப்படையில் அண்ணளவாக 1800 – 2000 வரையான தனித்தனியான விலைப்பட்டில் அதிகரித்தது. அந்த விமானங்களில் வழ்கப்பட்ட சகல உணவுகளும் மொத்தமாக பொருட்களை பெற்று பொதுவான சமையல் அறையில் தயாரிக்கப்பட்டிருந்தது. அதிகமான பொருட்கள் தனிப்பட்ட விமாங்களின் அடிப்படையில் வேண்டப்பட்டிருக்கவில்ல பயன்படுத்தப்பட்ட பொருட்கள் சகல விமானங்களிற்கும் பொதுவானதாக இருந்தன. ஆகவே, வேறுபட்ட விமானங்களில் தனித்தனி சமையலறைகள் பேணப்படாவிட்டால் மிகவும்	கம்பனியானது வருமான பட்டியலிற்கு சமையலறை பதிவெடுகளை தொடர்புபடுத்தி ஒழுங்கான முறையான இணக்கம் செய்யும் நடைமுறை அமுலாக்கப்பட வேண்டும். முறைமை முன்னேற்றங்கள் இலகுவான மொத் மெய்மையாய்விற்காக விமான இன்பிளையர் பக்சசினிற்கும் ஓரக்கிளிற்கும் இடையில் ஒருங்கிணைந்த தரவினை கருத்திற்கொள்ளப்பட வேண்டும். மேலும் சகல உற்பத்தி விடயங்களும் வாடிக்கையாளர் பட்டியல் மற்றும் வருமான அறிக்கைகளில் சரியாக பதியப்பட்டதை உறுத்திப்படுத்துவதற்கு காலரீதியான பரிசோதனை

		அதிநவீன மென்பொருள் மூலப்பொருட்களை அந்தந்த விலைப்பட்டியலுடன் இணைப்பது நடைமுறையில் சாத்தியமற்றிருந்தது.	உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	கம்பனியானது கைமுறையால் பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்கின்றதுடன் மூலதனமாக்கல் மற்றும் பெறுமானத்தேய்வு கணப்பிடலிற்காக ஒராக்கிளுடைய நிலையான சொத்து மாதிரிகளை பயன்படுத்தாமல் முறைமைக்கு பதிவுகளை பதிந்திருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும் பெறுமானத்தேய்வு கொள்வனவு செய்யப்பட்ட 1 ஆவது மாதத்தில் சகல சொத்துக்களிற்கு கணிப்பீடு செய்கின்றது. கொள்வனவு செய்யப்பட்ட உள்ளபடியான திகதி வெளிப்படுத்தப்படவில்லை.	பெறுமானத்தேய்வு 2023 ஏப்ரல் 1 இல் ஓராகிள் EBS இற்கும் கைமுறையான FA பதிவேட்டிற்கும் இடையில் அவதானிக்கப்பட்ட வித்தியாசங்கள் கதரணமாக கைமுறையால் மேற்கொள்ள வேண்டியிருந்தது. கைமுறையிலான தொகைகள் கணக்கீட்டு கொள்கை அடிப்படையில் உண்மைத் தன்மையை கண்டுபிடிக்கப்பட்டன. மாத தொடக்கத்தில் கொள்வனவு திதகதி கருத்திற்கொள்ளப்பட்டது. இது 2026/27 இல் செலுத்த வேண்டியுடள் அடுத்த மதிப்பாய்வில் திருத்தப்படும்.	கம்பனியானது பெறுமானத்தேய்வு கணிப்பீடு சுயமாக்குவதற்கும் சரியான பதவுகளை உறுதிப்படுத்துவதற்கும் ஒராக்கிள் நிலையான சொத்து மாதிரிகளை அமுலாக்கப்பட வேண்டும்.
(இ)	கம்பனியானது உற்பத்தி பொருட்கள், பராமரிப்பு விடயங்கள், உபகரணங்கள், இரசாயணங்கள் மற்றும் டீசல்கள் உள்ளடங்கலாக வேறுபட்ட வகுதி பொருளிப்புக்களை பேணுகின்றது என அவதானிக்கப்பட்டது. உற்பத்தி இருப்புக்கள் மாத்திரம் .இன்பிளையர் முறைமையை பயன்படுத்தி நிர்வகிக்கின்றது. இந்த விடயம் இன்பிளையர் முறைமை தர இணக்கப்பர்டிற்காக வெண்டப்பட்ட அறிக்கையை தயாரிக்கின்ற அறிக்கையாக இருக்கவில்லை. (அதாவது ஆரம்ப மீதி + சேர்ப்பனவுகள் _ வழங்கல் = இறுதி மீதி) இதன் விளைவால் நாங்கள் உற்பத்தி பொருளிருப்பு அளவகளை மெய்மையாய்வு செய்யவோ அல்லது இணக்கம் செய்யவோ இயலாதிருந்தது. ஏனைய பொருளிருப்பு வகுதிகள் (பராமரிப்பு உபகரணம், இஇரசாயணம், டீசலகள்) ஒராக்கிள் முறைமையில் பேணப்படுகின்றன. இருப்பு அசைவுகள் மற்றும் அளவுகள் சரியாக மெய்மையாய்வு செய்ய முடியும்.	ஒராக்கிளை போலன்றி இன்பிளையர் முறைமை இந்த ரோக்கத்திற்கான ஒருங்கிணைந்த அறிக்கையை உருவாக்குவதில்லை இன்பிளையர் முறைமை பராமரிக்கப்படும் பழுதடையக் கூடிய பொருட்களை, பெறப்பட்ட பொருட்கள் குறிப்பு (GRNs) மற்றும் வழங்கல் குறிப்புக்களை கருத்திற்கொண்டு அளவு சரிபார்தலிற்கான மற்று நடைமுறையை செய்யலாம் சகல பொருள் இருப்புக்களும் சரிபார்ப்பை கணிசமாக நெறிப்படுத்தம் என எதிர்பார்க்கப்படும் ஒருங்கிணைந்த முறைமையை செற்படுத:தம் வேலையில் நாங்கள் தற்போது ஈடுபட்டுள்ளோம் புதிய ERP முறைமை 2026 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டு அமுலாக்கப்பட்டுள்ளது. கம்பனியானது இந்த அறிக்கை பற்றிய வேலையை விருத்தி செய்வதற்கு தொகுதி IT பிரிவுடன் வேலை செய்கின்றது.	கம்பனியானது ஒருங்கிணைந்த ERP முறைமைக்கு இன்பிளையர் முறைமையிலிருந்து உற்பத்தி பொருளிருப்பு முகாமைத்துவத்தினை ஒராக்கிள் அல்லது இன்னொரு பொருத்தமான தீர்வு) குறைக்கப்பட வேண்டும். பொருளிருப்பு பரிசோதனை மற்றும் பொருளிருப்பு அளவு இணக்கம் பூர்த்தியாக்க உதவுகின்றது. சகல இருப்பு வகுதிகளும் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்கும் சரியான தன்மையை மேம்படுத்துவதற்கும் நம்பகமாக அறிக்கையிடலை உறுதி செயவதற்குமாக உள்ளது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,859,729,007 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 4,054,238,126 ஆக இருந்தது. ஆகவே நிதி விளைவுகளில் ரூபா 805,490,881 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. ரூபா 133,991,836 ஆல் வாடிக்கையாளருடனான ஒப்பபந்தத்திலிருந்தான வருமான அதிகரிப்பு, ரூபா 101,292,997 ஆல் விற்பனை கிரயம் வீழ்ச்சி, ரூபா 170,283,174 ஆல் செயற்பாட்டு செலவினம் குறைவடைந்தமை மற்றும் ரூபா 1,006,569,542 ஆல் தேறிய நிதிச் செலவினத்தில் வீழ்ச்சி என்பனவே இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

2020/21 முதல் 2022/23 ஆம் ஆண்டு வரை கம்பனியின் பெறுமதி சேர்த்தல் படிப்படியாக அதிகர்த்திருந்ததுடன் 2023/24 ஆம் ஆண்டிலிருந்து மெதுவாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டில் திரும்பவும் அதிகரித்திருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டிருந்தன.

விபரங்கள்	**(ரூபா மில்லியன்)**				
	2024/25	**2023/24**	**2022/23**	**2021/22**	**2020/21**
வரிக்க பின்னரான இலாபம் (பங்கிலாப கொடுப்பனவிற்கு முன்னர்)	4,859.73	4,054.24	4,697.21	2,802.70	(909.23)
கூட்டுக: ஊழியர் வேதனம்	2,639.36	2,416.19	2,211.52	1,446.29	905.56
அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் (நேரற்ற)					
முனுனுரிமை பங்குகள்	-	-	-	-	81.27
சாதாரண பங்குகள்	-	-	-	2,382.29	3,569.63
NBT	-	-	-	-	-
VAT	-	-	-	-	2.59
ஏனைய வரிகள் - ESC	-	-	-	-	-
பெறுமானத்தேய்வு மற்றும் திரட்டல்	294.83	268.79	468.34	467.32	454.38
மொத்தம்	7,793.92	6,739.22	7,377.07	7,098.60	4104.20

2.3 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

ஐந்து ஆண்டுகளின் மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனி நீதி நிலைமை தொடர்பான முக்கியமான வீதங்கள் பின்வருமாறு உள்ளன.

	2024/25	2023/24	2022/23	2021/22	2020/21
நடைமுறை பொறுப்புகளிற்கான நடைமுறைச் சொத்துக்கள் (தடவைகளின் எண்ணிக்கை)	16.35	12.12	7.53	12.58	19.07
விரைவு விகிதம்	15.92	11.79	7.24	12.30	18.60
கடன் உரிமை விகிதம்	0.02	0.04	0.06	0.10	0.11
EPS- ஒரு பங்கிற்கான உழைப்புகள்	5.17	4.31	5.00	2.98	(0.96)
ஒரு பங்கிற்கான பங்கிலாபம்	-	-	-	-	2.53
மொத்த இலாப எல்லை	77%	76%	75%	74%	53%
உரிமை மூலதனத்திற்கான பெறுகைகள்	21%	22%	32%	26%	(12%)
இருப்பு சுழற்சி வீதம்	5.82	6.18	7.55	4.77	1.33

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கம்பனியானது வலுவான செயலாற்றலை காட்டுகின்ற அதேநேரம் பயன்படுத்தப்படாத சொத்துக்கள் மற்றும் நிதிகளின் பயன்படுத்தல் போதாமை உள்ளடங்க மேற்குறித்த சாதாரண நடைமுறை மற்றும் விரைவு வீதங்களுடன் திரவத்தன்மை மிகவும் உயர்வாக உள்ளது என சில நிதிக் குறிகாட்டிகள் குறிப்பிடுகின்றது. உரிமை மூலதனம் மீதான வருவாய் 2020/21 முதல் 2022/23 வரை 12 சதவீதத்திலிருந்து எதிர்மறையாக படிப்படியாக அதிகரித்தது ஆனால் 2023/24 இலிருந்து திரும்பவும் வீழ்ச்சியடைந்ததுடன் 2024/25 அளவில் 21 சதவீதத்தை அடைந்திருந்தது.

(ஆ) பொருளிருப்புச் சுழற்சி குறைவடைந்திருந்தது, மெதுவாக நகரும் இருப்புக்கள் அல்லது மேலதிக இருப்புக்கள் என்பவற்றினை குறிக்கின்றது. பொருட்தகராறு பங்குதாரர் திருப்தியின்மை காரணமாக அண்மைய ஆண்டுகளில் பங்கிலாபம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இறுதியாக உரிமை மூலதனத்திற்கான கடன் வீதம் மிகவும் குறைவாக இருப்பது குறைவான கடன் பயன்படுத்தலைக் காட்டுவது நிதி ஆபத்தை குறைக்கின்றது ஆனால் வளர்ச்சி சந்தர்ப்பங்களை வரையறுக்கின்றது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	இலங்கை சிவில்விமான போக்குவரத்து அதிகாரசபையால் வழங்கப்பட்ட மூல விமான வேவைகள் வழங்குநர் அனுமதிப் பத்திரத்திற்கு உணவு	காலம் கடந்துள்ளதுடன் முன்னதாக 90 நாட்கள் அனுமதிப்பத்திர புகுபித்தலிற்காக பியோக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வறாயினும் கம்பனியாது	கம்பனியானது சகல ஒழுங்குபடுத்தல் அனுமதிப்பத்திரம் அனுமுதிகள், சரிபார்ப்பதற்கு

	வழங்கல் சேவைகளிற்காக புதுப்பித்தல் விண்ணப்பம் 2025 ஏப்ரல் 16 இல் வழங்கப்பட்டது. முன்னதாக சமர்ப்பித்தல் வேண்டப்பட்ட குறுகிய வீழச்சியாகும்	அனுமதிப் பத்திரம் காலாவதியாவதற்கு முன்னர் விண்ணப்பிக்கப்பட வேண்டும் CAASL ஆல் செய்யப்பட்ட கணக்காய்வு முடிவடைந் திருந்ததுடன் விமான சேவை வழங்குநர் அனுமதிப் பதிதிரம் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது.	கண்காணிப்பு பொறிமுறையை தாபிக்கப்பட வேண்டும். மற்றும் அனுமதிப் பத்திரங்களின் நிலை, அனுமதிகள், CAPs மற்றும் புதுப்பித்தல் என்பவற்றினை சோதிப்பதற்கு மத்திய மயப்படுத்தப்பட்ட இணக்க கட்டுப்பாடு விருத்தி செய்யப்பட வேண்டும்.
(ஆ)	அனுமதிப்பமத்திரம் புதுப்பித்தலிற்கு முன்னர் இனங்காணப்பட்ட பல இணங்காமை மற்றும் செயற்பாட்டு குறைபாடுகள் உணவு சான்றுபடுத்தல் கணக்காய்வு நடாத்தப்பட்டது. பிரதான விடயங்கள் CAASL அனுமதி இல்லாமல் கைநூலிற்கான அனுமதிக்கபப்டாத திருததங்களை உள்ளடக்கியது. BAI இற்கும் MRIA இற்கும் இடையில் உணவு வழங்கலிற்காக SOP அனுமதி இல்ாதிருந்தது. மேலும் உணவு பாதுகாப்பு நடைமுறை முறைப்பாடு கையாளல் மற்றும் தொடர் பரிசோதனைகள் போன்றன அப்பகுதியில் போதாதிருந்தது. வியாபார தொடர்ச்சி திட்டம் வேணடப்பட்டவாறு மீளாயவு செய்யப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வு சுட்டிக்காட்டியது. இதனால் ஒழுங்குபடுத்தல் இணக்கம் மற்றும் செயற்பட்டு நடைமுறை நலிவாக இருப்பதைக் காட்டுகின்றது.	CAASL ஆல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் SLC ஆனது முன்ஜனய கணக்காய்விலிருந்து குறிப்பிடத்தக்களவு நியமம் மற்றும் நடைமுறைகளில் முன்னேற்றத்தை காட்டியிருந்தது. 2025 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் 89.76 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 84.31 சதவீத புள்ளியாக இருந்தது. (அ) சில திருத்தங்கள் புலனாய்வு செயததைமையால் CAASL இடமிருந்ர் முன்னனுமதி பெறாமல் செயற்பாட்டு கைநூலிற்கு செய்யப்பட்டிருந்தது. (ஆ) BAI இற்கும் MRIA இற்கும் இடையில் உணவு வழங்கலிற்காக நியம செயற்பாட்டு நடைமுறை (SOP) இருக்கவில்லை. எவ்வாறாயினும் SOP புதிதாக தாபிக்கப்பட்டது. (இ) விரிவான முறைப்பாடு கையாளல் மற்றும் தொடர் பரிசோதனைகள் போன்றன அப்பகுதியில் இருந்தது. எவ்வாறாயினும் உற்பத்திப் பிரிவில் ஆவணமாககல் நடைமுறையை வலுப்படுத்துவதற்கு அளவீடுகள் அமுலாக்கபபட்டிருந்தது. (ஈ) BCM இற்கு பொறுப்பாக சிரேஸ்ர முகாமையாளர்-விற்பனைகள் மற்றும் வாடிக்கையாளர் செவைகளிற்கு ஒப்படைக்கபபட்டது. மற்றும்	கம்பனியானது உணவு வழங்கலை சான்றுபடுத்தும் கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட இணங்காமை மற்றும் செயற்பாட்டு குறைபாடுகளை வெளிப்படுத்துவதற்கு உடனடியாக சரயான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		ஆவண பூர்த்தியாக்கல் நாளது வரையாக்கல் நடைமுறை தற்பொது செயற்பாட்டில் உள்ளன. வழங்குநருடைய விபரங்கள் ஏற்கனவே நாளது வரையாக்கப்பட்டிருந்தது.	
(இ)	2025 மார்ச் 31 இல் உள்ளவாறாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 119,925,029 தொகையான ஏற்பாடுகள் மெதுவாக நகரும் பொருளிருப்பாக பதியப்பட்டது. இந்த ஏற்பாடு ரூபா 430,220,582 பெறுமதியான முற்கொண்டு வரப்பட்டிருந்த குறிப்பிடத்தக்க மற்றும் குறிப்பிடாத இரண்டு இருப்புக்களையும் கொண்டுள்ளது. ஆகவே, ரூபா 18,410,593 பெறுமதியான பொருளிருப்பு விடயங்களில் ஒரு ஆண்டிற்கு மேலாக இருந்த அதேநேரம் ரூபா 8,037,221 பெறுமதியான பொருளிருப்பு மூன்று ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாது இருந்தது.	• ரூபா 119,925,029 இல் 32 சதவீதம் உற்பத்தி இருப்பில் இருந்தது மற்றும் 68 சதவீதம் பாரமரிப்பு மற்றும் ஏனைய இருப்புக்களில் இருந்தது. • கம்பனியானது விமான உணவு வழங்கலில் ஈடுபட்டிருந்தமையால் அதனுடைய முக்கியமான விமானங்களிற்கான ஆபத்தான உபபாகங்கள் மற்றும் தேவைப்பட்ட இயந்திரங்கள் அவசரமான நிலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் பொதியிட்ட பொருட்கள் மொத்தமாக குறைந்த செலவில் பெறுவதற்கு கொள்வனவு செய்யப்பட்டதுடன் மெதுவாக நகரும் பொருட்களிற்காக பிரதான காரணங்களான பெரிய மட்ட விங்குநருடைய MOQ's ஐ நிரப்புவதுமாக இருந்தது என குறிப்பிடப்பட்டது. • சகல குறிப்பிடத்தக்க இருப்புக்களும் கைதவிர்த்தல் மற்றும் பதிவழிக்காமல் காலாவதியாவதற்கு முன்னர் நுகருவதற்கும் சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டது. பராமரிப்பு மற்றும் பொதியிடல் பொருட்கள் காலாவதியாகும் திகதியை கொண்டிருக்கவில்லை ஆகவே, அழிவடைதலிற்கு உட்படுதல் குறைந்த ஆபத்தினை கொண்டிருக்கின்றது.	கம்பனியானது ருஸ்ட் பொருளிருப்பு காலம் மற்றும் பொறிமுறை அமுலாக்கப்பட வேண்டியதுடன உரிய நேர கைதவிர்ப்பிற்காக தெளவான நியமம் மற்றும் நடைமுறை விருத்தி செய்யப்பட வேண்டும்.

3.2 கொள்வனவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2006 மார்'ர் 01 ஆந்திகதிய அரசாங்க கொள்வனவு வழிகட்டலின் 4.2.1(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்தது மூன்று ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் பிரதான	2025 இல் தொடங்கப்படும். SLC ஆனது மூன்று ஆண்டு மேம்படுத்துவதன் மூலம் தேவையான திட்டமிடல் நீடிப்பதுடன் சீரமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள்	கம்பனியானது அரசாங்க கொள்வனவு வழிகாட்டலை பின்பற்றப்பட வேண்டும்.

	கொள்வனவு திட்டத்தில் பட்டியலிடப்பட வேண்டியதுடன் 4.2.1 (உ) ஆம் பிரவின் பிரகாரம் ஆறு மாதங்களை விஞ:சாத கால இடைவெளிகளில் ஒழுங்காக நாளது வரையாக்கப்பட்ட வேண்டும். எவ்வாறாயினும் கம்பனியாது இதன்படி பிரதான கொள்வனவு திட்டம் தயாரித்திருக்கவில்லை.	எடுக்கப்பட்டதுடன் பிரதான கொள்வனவு திட்டம் 2025/2026, 2026/2027, மற்றும் 2027/2028 ஆண்டுகளை மேவுகின்றது. BOD ஆல் அனுமதிக்கப்பட்டது.	
(ஆ)	16 Hi-லோடர் டிரக்கில் CCTV முறைமைகள் வழங்கி பொருத்துவதற்காக 2024 செப்தெம்பர் 13 இல் ரூபா 10,075,359 பெறுமதியான கொள்வனவு கட்டளை வழங்கப்பட்டிர்தது. எவ்வாறாயினும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் பல மீறல்கள் அவதானிக்கப்பட்டது. பிந்திய கொள்வியாளருக்கு ஒப்பந்தம் வழங்குதல் (6.3.2. ஆம் பிரிவை மீறல்), கட்டாயமாக பிணை முறிகள் பெறுவற்கு தவறுதல் (5.3.11 ஆம் பிரிவை மீறல்), முறையான ஒப்பந்த உடன்படிக்கை இன்மை (8.9 ஆம் பிரிவை மீறல்) மற்றும் செயலாற்றல் பிணைமுறி இன்மை (5.4.10 ஆம் பிரிவை மீறல்) என்பன உள்ளடங்குகின்றன. மேலும் செயற்திட்டம் பூர்த்தியாக்கல் அறிக்கை சமர்ப்பிக்காமல் 220 நாட்கள் தாமதப்பட்டிருந்ததுடன் பொருத்தப்பட்ட முறைமைகள் செயற்படாது இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் கம்பனியானது 20 சதவீத முற்பண கொடுப்பனவிற்கு பதிலாக 30 சதவீத முற்பணம் வழங்கி நியம கொடுப்பனவு கட்டமைப்பில் இருந்து விலகியிருந்தது. அதே உபகரயத்திற்காக 2023 இல் முன்னைய செலவினம் ரூபா 1.78 மில்லியன் வினைத்திறனற்று வழங்கப்பட்டிருந்தது.	2025 இலிருந்து சிறீலங்கன் கற்றரிங் கொள்வனவு வழிகாட்டலை கடுமையாக பின்பற்றுவதுடன் நீண்டகால் பிந்திய கேள்வி ஏற்கப்பட மாட்டாது. இந்த கேள்வி ஒரு பிந்திய கெள்வி உள்ளடங்க மூன்று கேள்விகள் பெறப்பட்டது. பிந்திய கேள்வி ஏனைய இரண்டு கேள்விகளும் உத்தியோகயூர்வமாக திறப்பதற்கு மன்னர் கையளிக்கப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு (TEC) மற்றும் கொள்வனவு புழுவின் (PC) பரிந்துரைகளின் அடிப்படையில் பிந்திய கேள்வி போட்டி கேள்வியாளரை கைளரவப்படுத்தும் நோக்கில் மதிப்பாய்விற்காக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ரூபா 20 மில்லியனிற்கு கீழான பொறுமதியுடைய செயற் திட்டங்களிற்காக தகுதியுடைய கேள்வியார்களிடமிருந்து கேள்வி வெளிப்படுத்தல்கள் பெறப்பட்டிருந்தது. முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் உபகரணம் உத்தரவாதத்தின் கீழ் உள்ளதுடன் AMC உத்தரவாத காலப்பகுதி காலாவதியாவதற்கு முன்னர் (2028/03/04) உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். செயலாற்றல் பிணைமுறி காலம் கடந்திருந்தமையால் கேள்வியாளரிடம் கோரப்பட்டிருக்கவில்லை. பொருத்தப்பட்ட முறைமை தற்போது செற்படுகின்றதுடன் கண்டுபிடிப்புகள் செய்யப்பட்டன. 30 சதவீத முற்பணங்கள் நிபந்தனையற்ற பிணை	கம்பனியானது அரசாங்க கொள்வனவு வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகளை பின்பற்றப்பட வேண்டும்.

		முறிகளிற்கு எதிரதக PC அனுமதி பெற்ற பின்னரே செலுத்தப்பட்டது. ரூபா 1.78 மில்லியன் கிரயத்தில் முன்னைய முன்னோடி செயற்திட்டம் வெற்றியளித்தள்ளது, உயர் லோடரின் நிறுவன அணியில் ஆறு பாதுகாப்பு கமராக்களிற்கு கம்பனி அனுமதித்திருந்தது. முறையான திட்டம் உள்ளது.	
(இ)	மொத்தம் 468 CCTV கமராக்கள் முறையான கண்காணிப்பு திட்டம் இல்லாமல் வேண்டப்பட்ட கட்டுநிதி அடிப்படையில் கம்பனி வளவு முழுவதும் பொருத்தப்பட்டது. விமான சமையலறைக்காக ரூபா 375,000 CAPEX மதிப்பிடப்பட்டிருப்பினும் குறித்துரைத்த தேவைகளை கருத்திற்கொள்ளாமல் உள்ளபடியான கிரயம் 119 கமராக்களுடன் ரூபா 20.4 மில்லியனிற்கு மாற்றப்பட்டது பிரதான கொள்வனவு மீறல்கள்செயலற்றல் பிணைமுறியின்மை மற்றும் முறையான ஒப்பந்தமின்மை என்வற்றினை உள்ளடக்குகின்றது. மேலும் 26 கமராக்கள் முறையாக செய்றற்பாடதருந்ததுடன் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	விமாத்தில் உணவு வழங்ல் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற செயற்பாடுகிற்கு முன்னேற்றப்பட்ட கண்காணிப்பு வசதிகளை வெளிப்படுத்தவதற்கு மேலதிய CCTV கமரா மேவுகைக்காக அவ்வப்பொது பாதுகாப்பு பிரிவிற்கு வேண்டுகை செய்யப்பட்டது. மேலதிக 126 கமராக்கள் பொருத்துவதற்கான சபை அனுமதி பெறப்பட்டிருந்தது. கேள்வி பிணை முறி வெளிப்படுத்தல் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயலாற்றல் பிணைமுறி காலம் கடந்திருந்தமையால் பெறப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் வெற்றிகரமாக பூர்த்தியாக்கப்பட்டது. 26 செயற்பாடற்ற கமராக்கள் புதிய பொருத்தலுடன் தொடர்புபட்டிருக்காத ஒழுங்கான மீளாய்வு மேற்கொண்ட பின்னர் SLC இன் பாதுகாப்பு பிரிவால் இனங்காணப்பட்டது. இது உரிய பிரிவால் கையேற்று சரியான நடவடிக்கை எடுக்கப்டுகின்றதை குறிக்கின்றது	கம்பனியானது அரசாங்க கொள்வனவு வழிகாட்டலிலுள்ள சகல ஏற்பாடுகளை பின்பற்றப்பட வேண்டும்..
(ஈ)	கம்பனியானது 2024/25 இல் ரூபா 50 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் இரண்டு அவன்களை கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டது. எவ்வாறாயினும் ரூபா 9 மில்லியனிற்கு ஒரு அவன் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. கணக்காய்வு திகதியில் 200 நாட்கள் தாமதத்துடன் ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் அவன்	தாமதங்கள் கருத்திற் கொள்ளக்கூடிய காலப் பகுதியில் அனுபவமுடைய உத்தியோகத்தர் வெளியேறல் கேள்வி காலத்தில் விளைந்த கால நீடிப்பில் வழங்கலில் தாமதம், செயற்திட்ட நோக்கொல்லை மாற்றம் மற்றும் குறித்த காலப்பகுதியை விட நீண்டகால் நுகரப்பட்டிருந்த விரிவாகன தொழில்நுட்ப மற்றும்	கம்பனியானது அரசாங்க கொள்வனவு வழிகாட்டலிலுள்ள சகல ஏற்பாடுகளை பின்பற்றப்பட வேண்டும்.

	பொருத்தப்படாது இருந்தது. செயலாற்றல் பிணைமுறி, செயவாற்றல் இன்மையால் கம்பனிக்கான ஆபத்தை வெளிப்படுத்தல் மற்றும் குறைவாக கொள்வனவு திட்டமிடல் மற்றும் கட்டுப்பாடு உள்ளடங்கலான பிரதான கொள்வனவு வழிகாட்டல் மீறப்பட்டது.	நிதி மதிப்பீடுகள் பொன்ற பல காரணங்களாக இருந்தன.	
(உ)	ரூபா 24.6 மில்லியன் பெறுமதியான மெலேர், பப்பாசி மற்றும் அன்னாசி போன்ற பல்வெறு கொள்வனவு கட்டளைகளை வழங்குவதில் தாமதம் காணமாக போட்டி கேள்வி இல்லாமல் நேரடியாக அல்லது திறந்த சந்தையில் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது.	குறிப்பிடப்பட்ட விடயங்கள் பருவகால வழங்கல் மாதிரியில் இருந்தன. சில்லறை கொள்வனவுகள் உரிய திகதியில் POs பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட வழங்குநர் வழங்கப்பட்டிருக்காத போது செய்யப்பட்டன. சில்லறை கொள்வனவில் தாமத வழங்கல் அல்லது தர நிராகரிப்புகள் பெரம் பேசுகின்ற இடங்களில் நிகழ்ந்தன.	கம்பனியானது அரசாங்க கொள்வனவு வழிகாட்டலிலுள்ள சகல ஏற்பாடுகளை பின்பற்றப்பட வேண்டும்..
(ஊ)	தெரிவுசெய்யப்பட்ட செற்பாட்டிலுள்ள கொள்வனவு நடவடிக்கைகளின் மீளாய்வு (தொடர்ச்சியான) இணங்குதல், ஆவணம் மற்றும் கொள்வனவு நடைமுறை தாபிப்தை பின்பற்றுதல் போன்ற பிரதான பகுதிகளில் பல குறைபாடுகளை இனங்கண்டிருந்தது. கொள்வனவு நடைமுறையில் ஆரம்ப திட்டமிட்ட காலப்பகுதியை விட இரண்டு ஆண்டுகள் பின்தங்கிய தாமததுடன் சில கொள்வனவு நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இது கால அட்டணை முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்றில் நலிவை குறிக்கின்றது. மேலும் செயற்திட்ட கால அட்டவணைகள் (PTS) முறையாக நாளது வரையாக்கப்பட்டோ அல்லது கண்காணிக்கப்பட்டோ இருக்காமை கொள்வனவு வழியாட்டலின் கீழ் கட்டாய வேண்டுகையை மீறுகின்றது. போதிய விளம்பரமின்மை மற்றும் சர்வதேச விளப்பரப்படுத்தல் இன்மை வரையறுத்த போட்டியாளர் பங்குபற்றல் மற்றும் வெளிப்படை ஈருக்கக்கூடிய கொள்வனவு வழிகாட்டலின் 3.1.4 ஆம் பிரிவை மீறுகின்ன சர்வதேச போட்டி கேள்வி கோரலின் (IBC) கீழ் குறிப்பாக என்பன கணக்காய்வில் வெளிப்பட்டது. மேலும் மதிப்பிடப்பட்ட, பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான	தற்போது செயற்திட்ட கால அட்டவணைகள் (PTS) நாளது வரையாக்கப்படது கண்காணிக்கப்படுகின்றது எவ்வாறாயினும், 2023/24 காலப்பகுதியின் பொது உயர்ந்த உத்தியோகத்தர் வெளியேற்றத்துடன் கடந்தந்தது. சகல ICB கொள்வனவு பத்திரிகை விளம்பரம் மற்றும் கம்பனியின் இணைய தளததில் விளம்பரம், வெளிநாட்டு அமைச்சு வாரியாக சுற்றறிக்கையிடல் மற்றும் DG சந்தை இணைய தளத்தில விளம்பரப்படுத்தல் என்பன மூலம் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் வெளிநாட்டு அமைச்சில் சுற்றறிக்கையிடுதல் மற்றும் DG சந்தை இணையதளத்தில் வெளியிடலை நிருபிப்பதற்கு சில கொள்வனவு நடைமுறைகளிற்கு மேலான சான்றுகள் கிடைத்திரக்கவில்லை. ICB கொள்வனவு நடைமுறைக்கான முன்வைப்புகள் மேற்குறிப்பிட்ட சகல கொள்கைகளை உறுதிப்படுத்துவதற்கு முன்னெச்சரிக்கை போதாதிருந்தது மற்றும் Promise.lk ˙ அரசாங்க கொள்வனவு இணையதளத்தில்	கம்பனியானது அரசாங்க கொள்வனவு வழிகாட்டலிலுள்ள சகல ஏற்பாடுகளை பின்பற்றப்பட வேண்டும்..

	கிரயங்களிற்கு இடையில் குறிப்பிடத்தக்க விலகல்கள் இருந்தமை கிரய எதிர்வுகூறல் மற்றும் நிதிக் கட்டுப்பாடு நலிவாக இருப்பதை சுட்டிக்காட்டுகிறது.	விளம்பரமிடல் கணக்காய்வன் போது கிடைத்த முறையான சானறுகளுடன் கையேற்கப்பட்டுள்ளது. பாதீடு தயாரிக்கும் போது காலம் கடந்திருந்தல், உள்ளபடியான கொள்வனவு, மதிப்பீட்டு தவறுகள் மற்றும் விதப்புரைகளில் மாற்றங்கள் என்பன காரணமாக பாதீட்டிற்கும் உளளபடியான கிரயத்திற்கும் இடையில் விலகல்கள் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், உரிய கொள்வனவு குழு உள்ளபடியான கொள்வனவு பெறுமதிகளிற்காக அனுமதி பெற்றிருந்ததென உறுதிப்படுத்தியுள்ளது.	
(எ)	2024/25 ஆம் நிதியாண்டின் போது ரூபா 575,831,456 தொகையான 289 கொள்வனவு நடவடிக்கைகள் திட்மிடப்பட்டது. எவ்வாறாயினும் மீளாயவாண்டு இறுதியளவில் 50 கொள்வனவு மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இது 17 சதவீதம் குறைவான பூர்த்தியாக்கல் வீதத்தை வெளிப்படுத்துகின்றது.	ரூபா 575,831,456 தொகையான 289 கொள்வனவு நடவடிக்கைகள் கபெச் கொள்வனவுடன் தொடர்புபட்டது. வையறுத்த சிறீ லங்கன் கற்றரிங் வருடாந்தம் CAPEX செயற்திட்டங்களை தயாரிக்கின்றது. ஆனால், உள்ளபடியான முதலீடுகள் செயற்பாட்டு தேவைகள், நிதியளிப்பு திறன் மற்றும் உபாய முன்னுரிமைகள் என்பவற்றில் தங்கியுள்ளது. விமான உணவு வழங்கல் துறையில் மாற்றமயையும் தன்மை காரணமாக பாதீட்டிலிருந்து விலகல்கள் ஏற்படக்கூடும். வளங்களை மேம்படுத்துவதற்கும் ஆபத்துக்கயை குறைப்பதற்கும் தொடர்ச்சியான சேவை வழங்கலை உறுதிப்படுத்துவதற்கும் தேவைய திட்டங்கள் தொடர்ச்சிய அல்லது நிறுத்தி வைக்க நெகிழச்சித் தன்மையாக முகாமைத்துவம் பயன்படுத்தப்படுகின்றது.	கம்பனியானது வருடாந்த மற்றும் பிரதான கொள்வனவு திட்டங்கள் நெகிழ்ச்சி, முன்னுரிமை மற்றும் செயற்பாட்டு தேவைகளுடன் இணங்குதல் மற்றும் வளக் கிடைப்பனவு என்பன உள்ளதை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3.3 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2025 மார்ச் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 893 ஆக இருந்தது. 105 பதவிகளிற்காக 198 வெற்றிடங்கள் நிலவின. எவ்வாறாயினும் 39 பதவிகளிற்காக	2025 மார்ச் 31 இல் உள்ளவாறு சபை அனுமதித்த SLC பதவியணி 893 ஆக இருந்தது. 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு சபையால் அனுமதித்த SLC பதவியணியை விஞ்சியிருக்காத	கம்பனியானது அனுமதிக்கப்பட்ட பதவியணி எல்லையுடன் கடுமையாக இணங்கியொழுக வேண்டியதுடன்

	245 உத்தியோகத்தர்கள் வெளியிலிருந்து மனிதசக்தி சேர்க்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	உள்ளபடியான SLC பதவியணி 715 ஆக இருந்தது. வெளியிலிருந்து மனிதசக்தி பதவியணி சபையால் அனுமதிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது பாதீடு அனுமதிக்கப்படும் போது செயற்பாட்டுச் செலவினங்களின் கீழ் புறம்பாக பேணப் பட்டுள்ளதுடன் SLC நெரடி பதவியணியின் கீழ் உளளடக்கப்பட்டிருக்கவில்லை.	வெளியிலிருந்து மனித சக்தி பதவியணி உள்ளடங்க ஊழியர் ஆட்சேர்ப்பு உரிய அதிகாரிகளிடமிருந்து முன்னனுமதி பெறாமல் உள்ளபடியான பதயிவணியை விஞ்சியிருக்கவில்லை என உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	உள்ளபடியான பதவியணியை பாதிடப்பட்ட பதவியணியுடன் ஒப்பிடும் போது 12 பதவிகளிற்காக மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு அனுமதிக்கப்பட்டிருக்காததுடன் 8 ஆட்சேர்ப்புகள் அனுமதிக்கப்பட்ட பதவியணியை விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது.	வழங்கப்பட்ட ஊழியர் தரங்கள் / பதவிகள் பணிப்பாளர் சபையால் அனுமதிக்கப்பட்ட மொத்த அனுமதிக்கப்பட்ட பதவியணிக்குள் உள்ளபடியான பதவியணி பேணப்பட்டிருந்தது. பதவிகள் வேறுபட்டதாக இருந்ததுடன் வழங்கப்பட்ட தர வகுதிக்காக முறையாக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணி அனுமதிக்கப்பட்ட பதவியணிக்கு கீழே இருந்தது. HR கொள்கை மற்றும் கைநூல் இதன்படி நாளது வரையாக்கப்படும்.	கம்பனியானது மேலதிக பதவிகளிற்காக உரிய அதிகாரிகளிடமிருந்து பெறப்படட சகல ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளையும் அனுமதிக்கப்பட்ட பதவியணிக்குள் மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
(இ)	2024/25 இல் 16 ஆட்சேர்ப்புகள் மீதான கணக்காய்வில் ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் கொள்கை இணக்கத்தில் முக்கிய தவறுகள் வெளிப்பட்டது. சம்பள கட்டமைப்பு இனங்காணப்பட்டது. தாரம் VIII-I உத்தியோகத்தர்களிற்காக குறிப்பிடுகின்ற சம்பளங்கள் சீரரற்ற முறையில் இரந்தது. தகைமை சான்றிதழ்கள் மெய்மையாய்வு செய்யப் பட்டிருக்காததுடன் வயது எல்லைகள் HR கைநூல் மற்றும் வேலை விளம்பரங்கள் இரண்டிலும் தவறவிடப்பட்டிருந்தது. ஒரு உத்தியோகத்தர் ஆகக்குறைந்த தகைமைகள் இல்லாமல் நியமிக்கப்பட்டிருந்ததுடன் பதவி தவறாக வகைப்படுத்தப் பட்டிருந்தது. தேரிவுப் பட்டியல் நடைமுறை வெளிப்படை தன்மை இல்லாதிருந்ததுடன் HR கைநூல் பின்பற்றப்படவில்லை. இது	சம்பள மட்டங்கள் இரகசியத் தன்மை காரணமாக உள்ளடக்கப் பட்டிருக்காததுடன் சம்பள மட்டங்கள் இருக்காததுடன் பணிப்பாளர் சபையால் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. தகைமைகள், அனுபவம், அறிவு மற்றும் தொழிற் திறன் அடிப்படையில் ஆட்சேர்ப்பு தரத்திற்கு பிரயோகிகக்கூடிய உரி யசம்பள மட்டங்களிற்குள் வேறுபட்ட சம்பளங்களில் அமர்த்தப்படும். சான்றிதழ் மெய்மையாய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது எதிர்காலத்தில் பின்பற்றப்பட்டு அமுலாக்கப்படும். சந்தையில் தகைமையுடைய மற்றும் தொழிற் திறனுடையவர்களின் பற்றாக்குறை மற்றும் இதன்விளைவால் உத்தியோகத்தர்களை நியமிப்பதில் தொழிற்துறையால்	கம்பனியானது சகல உத்தியோகத்தர் தரங்களிற்கும் நியம சம்பள மட்டங்களை விருத்தி செய்து அமுலாக்கப்பட வேண்டும் மற்றும் நிறுவனம் நியமனத்திற்கு முன்னர் சகல விண்ணப்பதாரியின் தகைமை சான்றிதழ்கள் மற்றும் உரிய ஆவணங்களை மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும்.

ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் நியாயத் தன்மை பொறுப்புக்கூறல் மற்றும் கட்டுப்பாடுகள் மீது கவலை எழுந்தது.	முகம்கொடுக்கும் கஸ்ரங்கள் கரணமாக விசேடமாக உற்பத்தி சமையலாளர், உணவு மற்றும் சிற்றூண் உத்தியொகத்தர் மற்றும் தொழில்நுட்ப பதவிக்கான வயதெல்லை விளம்பரங்களில் பரந்த பார்வையாளர்களிற்கு திறப்பதற்காக கைநூலில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. விசேட உத்தியோகத்தர் 2024 திசெம்பரில் சேர்க்கப்பட்ட அனுப்புதல் கட்டுபாட்டுடன் தொடர்புபட்டது. தனிப்பட்ட நபர் உயர் தகுதியுடையதாக கருதப்பட்ட வழங்கல் தொடர் முகாமைத்துவத்தல் முதுமாணி பட்டம் பெற்றிருந்தார் மேலும் 14 ஆண்டுகளிற்கு மேலாக உள்நாட்டு மற்றும் சர்வதேச அனுபவத்துடன் இந்த பதவிக்கு பொருத்தமானவர் என்பதை நிரூபித்தார். சகல விண்ணப்பங்களும் நேர்முகப் பரிட்சைக்கு அழைப்பதற்கு முன்னர் சபையால் அனுமதிக்கப்பட்ட குறைந்த தகைமைகளின் பிரகாரம் HR ஆல் மதிப்பாய்வு செய்யப்பட்டன.

3.4 வாகன அணியின் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
வரையறுத்த சிறீ லங்கன் கற்றரிங் கம்பனியின் (SLCL) பெயரின் கீழ் பதிவு செய்யப்பட்ட நான்கு வாகனங்கள் கணக்காய்வு பரிசோதனையின் போது கம்பனி வளவில் பௌதீக ரீதியாக இருக்கவில்லை என கணக்காய்வில் கண்டறியப்பட்டது. இந்த முரண்பாடு இருந்த போதிலும் அந்த சொத்துக்கள் இன்மையை புலனாய்வு செய்யவோ அல்லது இணக்கம் செய்வதற்கோ முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது இரண்டு முறையாக உள்ளது. மேலும் அத்தகைய வாகனங்கள் கணக்காய்வாளர்களால் மெய்மையாய்விற்கு 2025 இல் FA பதிவேட்டில் இருக்கவில்லை.	கம்பனயானது காணாமல் போன வாகனங்களை கண்டறிவதற்கும் இதன்படி சொத்தப் பதிவேடுகளை சீராக்கல் செய்வதற்கும் விரைவான மற்றும் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளப்பட வேண்டும்.